சிறப்பிதழ்
Special Issue

*Chief Editor*
*Dr. M. Sadik Batcha*

*Advisory Editor*
*Dr. N. Chandra Segaran*

*Editorial Board*
*Dr. MAM. Rameez*
*Dr. Jeyaraman*
*Dr.A. Ekambaram*
*Dr. G. Stephen*
*Dr. S. Chitra*
*Dr. S.Senthamizh Pavai*
*Dr. A. Shunmughom Pillai*
*Dr. P. Jeyakrishnan*
*Dr. Seetha Lakshmi*
*Dr. S. Easwaran*
*Dr. Kumara Selva*
*Dr. Ganesan Ambedkar*
*Dr. Krishanan*
*Dr. Kumar*
*Dr. S. Kalpana*
*Dr. T. Vishnukumaran*
*Dr M. N. Rajesh*
*Dr. Govindaraj*
*Dr. Uma Devi*
*Dr. Senthil Prakash*
*Dr. Pon. Kathiresan*
*Dr. S. Vignesh Ananth*
*Dr.M. Arunachalam*
*Dr. S. Bharathi Prakash*

3-4பங்குனி 2052
16th - 17th March 2021

ISSN : 2321 - 984X

# நவீனத் தமிழாய்வு

(பன்னாட்டுப் பன்முகத் தமிழ் ஆய்விதழ்)

## Journal of Modern Thamizh Research

*(A Quarterly International Multilateral Thamizh Journal)*

Arts and Humanities (all), Language
Literature and Literary Theory, Tamil
UGC Care Listed (Group-I) Journal

சிறப்பிதழ் : தமிழ் உயராய்வுத்துறை, விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி (தன்னாட்சி)
எளையாம்பாளையம், திருச்செங்கோடு
முதுகலைத் தமிழ்த்துறை, விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் கல்லூரி (மகளிர்)
வீராச்சிபாளையம், சங்ககிரி

# தமிழ் இலக்கியங்களில் வாழ்வியல்

சிறப்பிதழ் ஆசிரியர்
**Special Issue Editor**

முனைவர் ம. கவிதா
முனைவர் செ. ஜெயந்தி

*Published by*
**RAJA PUBLICATIONS**
10, (Upstair), Ibrahim Nagar, Khajamalai,
Tiruchirappalli - 620 023, Thamizh Nadu, India.
Mobile : +91-9600535241
website : rajapublications.com

19 பகுதி-5
Part -5

மற்றொன்று:

# செம்மொழித் தமிழ்

(பன்னாட்டுப் பன்முகத் தமிழ் காலாண்டு ஆய்விதழ்)

ஜனவரி - மார்ச்

ஏப்ரல் - ஜூன்

ஜூலை - செப்டம்பர்

அக்டோபர்- டிசம்பர்

Journal of

# Classical Thamizh

**(A Quarterly International Multi lataral Thamizh Journal)**

January - March

April - June

July - September

October - December

ISSN:2321-0737

# இலக்கண இலக்கியங்களில் தமிழர் வாழ்வியல்

வா. கவிதா

உதவிப் பேராசிரியர், தமிழ் உயராய்வுத்துறை, விவேகானந்தாகலை மற்றும் அறிவியல் கல்லூரி, திருச்செங்கோடு, தமிழ்நாடு, இந்தியா.

முன்னுரை

ஒரு மொழி சிறந்து இவ்வுலகில் நடை போட வேண்டுமானால் அது பண்பட்ட இலக்கண இலக்கிய அமைப்பைப் பெற்றிருக்க வேண்டும். அவ்வகையில் கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே மூத்தகுடியாய்த் தோன்றி சீர்மிகு செம்மொழியாய் வளர்ந்த நம் மொழியின் இலக்கண இலக்கியத்தோடு நம் வாழ்வியல் முறையைக் காண்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

வாழ்வியல்

மக்களின் வாழ்வியலைத் தமிழ் இலக்கியங்கள் அகம், புறம் என்ற இரு நிலைகளில் பகுத்துப் பார்க்கின்றன. தொல்காப்பியம் ஓர் இலக்கண நூலாகக் கருதப்பட்டாலும் வாழ்க்கைப் பொருளை விளக்குகிறது. மேலும் நம் மக்களின் அக வாழ்வின் இயல்புகளையும் புறவாழ்வின் இயல்புகளையும் எடுத்து இயம்புவதில் நம் இலக்கியங்களோடு சேர்ந்தே நடைபோடுகின்றது என்பதில் ஐயமில்லை.

உயிரும் கொடுக்கும் தகைமை

சங்ககால மக்கள் நட்பை போற்றுவதிலும் சரியான காரணங்களுக்காக உயிரையும் கொடுக்கும் பண்பாளர்களாகவும் விளங்கினார்கள்.

புகழெனின் உயிரும் கொடுக்குவர்பழியெனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர்–புறம்

புகழால் பிறரினும் மேம்பட்ட வழிப் பிறக்கும் பெருமிதம். பிறரைக் காட்டிலும் தாம் மேம்பட்டதாகக் கொடுக்க இயலும் புகழ்மிகுசெயல் உயிர்எனும் பெருமித உணர்வையே தொல்காப்பியரின் பெருமிதம் பிறக்கும் காரணங்களுள் ஒன்றாகக் கூறலாம்.

மேலும் நம்மோடு பழகியவர் தமக்கு நஞ்சு ஊட்டினும் தம்மவர் என்னும் கண்ணோட்டத்தால் அதனை மறுக்காமல் உண்டு மேலும் அவர்களுடன் தொடர்ந்து இருப்பர் என்ற செய்தியினை

முந்தை இருந்துநட்டோர் கொடுப்பின்
நஞ்சும் உண்பர்நனி நாகரிகர் (நற்றிணை)

என்ற அடிகள் நமக்குக் கூறுகின்றன.

கற்பு

கருத்துச் செறிவுடைய வாழ்வியல் கற்பு. சங்க இலக்கியங்களில் போற்றப்பட்ட ஒன்று. ஒருவனுக்கு ஒருத்தி என்பது புனித ஒழுக்கமாகப் போற்றப்பட்டது.

உயிரினும் சிறந்தன்று நாணே நாணினும்
செயிர்தீர்காட்சிக் கற்புச் சிறந்தது
(தொல் - களவு)

என்ற நூற்பா மெய்ப்பிக்கின்றது.

இதை பாரதி பின்வரும் நோக்கில் அமைக்கின்றார்.

'கற்புநிலையென்று சொல்லவந்தால் அதை
இருகட்சிக்கும் பொதுவில் வைப்போம்'–
என்கிறார்.

நம் சமூகப் பண்பாட்டு நெறிகளாக அறம், பொருள், இன்பம் எனக் கூறுதல் பண்டையத் தமிழ் இலக்கிய மரபு.

இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு
(தொல் - களவு)

இன்ப வாழ்வைச் செறிவுடன் வாழ பொருளும் அப்பொருள் அறவழியில் வந்ததாகவும் அமைதல் வேண்டும் என்பது கருத்து.

திருமண உறவு

கல்யாணம் என்பது ஆயிரங் காலத்துப் பயிர் என்பது அனைவரும் அறிந்ததே. அதுவும் முறைப்படி நடப்பது சாலச் சிறந்தது.

ஓரான் வல்சிச் சீரில் வாழ்க்கை
பெருநலக் குறுமகள் வந்தென (குறுந்)

எளிய வாழ்வியலைக் கடைபிடிப்பவனாக இருந்தாலும் கூட அவ்வாழ்வில் திருமண உறவு ஏற்படும் பொழுது அது எளிய சிறப்பான வாழ்வைத் தரும் இதை,

கற்பெனப் படுவதுகாரணமொடு
மரபினோர்கொடுப்பக் கொள்வதுவே
(தொல் - பொருள்)

என்றவரிகள் சமன் செய்கின்றன.

விருந்தோம்பல்

வந்த விருந்தினரை முகம் கோணாமல் வரவேற்று இருக்கும் உணவைப் பகிர்தல் என்பது நம் மக்களின் தலைசிறந்த பண்பாகும்.

ஒப்படனே முகமலர்ந்து உபசரித்து உண்மைபேசி
உப்பில்லாக் கூழிட்டாலும் உண்பதே
அமிர்தமாகும். (விவேகசிந்தாமணி)

அவ்வகையில்

'நகைமுக விருந்தினன் வந்தெனப்
பகைமுக ஊரின் துஞ்சலோ இலனே'

எனச் சங்க இலக்கிய வரிகள் கூறுவதனை

'வருவிருந்து வைகலும் ஓம்புவான்' என்ற குறளடியும்
சுற்றமொடு கிழவனும் கிழத்தியும் சிறந்தது
பயிற்றல் (தொல் கற்பு)

வரிகளும் பறைசாற்றுகின்றன.

விருந்தினரை இன்முகத்தோடு வரவேற்று, அவர்களை நன்கு உபசரித்து அவர்கள் செல்லும் போது ஏழடி நடந்து வழியனுப்பல் (பொருநீர் ஆற்றுப்படை நிகழ்வுகள்) நடைமுறையில் இருந்துள்ளன.

குழந்தைச் செல்வம்

பெறுவதற்கு அரிய செல்வம், பொன்னும் பொருளும் மலிந்துகிடக்கினும் இச்செல்வம் இல்லையெனில் எப்பயனுமில்லை.

'பொருளொடுபுணர்ந்தபக்கந் தானும்'
(தொல் - புறம்)

குழந்தையும் தெய்வமும் குணத்தால் ஒன்று என்றார்கள். வாழ்நாளின் பயனே இச்செல்வத்துள் தான் உள்ளது. ஆனால் ஒரு சில காலக் கட்டங்களில் இக்குறை பெண்களை மட்டுமே சார்ந்ததாய் அவர்களை மலடி என ஒதுக்கியது. இருப்பினும் சங்க இலக்கியம் இல்லோர் என இருவரையும் சுட்டியது சிறப்பிற்குரியது.

படைப்புப் பல படைத்துப் பலரோடு உண்ணும் உடைப் பெருஞ்செல்வந்தர்களாக இருந்தாலும் கூட

மயக்குறு மக்களை இல்லோர்க்குப்
பயக்குறை இல்லைத்தாம் வாழும் நாளே
(புறம்)

என்கிறது.

மறக்குடி மகளிர்

மறக்குடி மகளிர் வரபண்பு மிகுந்தவர்களாய் இருந்தனர். போர்களைப் பற்றிப் பேசும் புறநானூறு போன்ற தொகை நூல்களில் இம்மகளிரின் வீரப்பண்புகள் அதிகம் பேசப்படுகின்றது. போர்களத்தில் களிற்றோடு போரிட்டு இறந்தான் மகன் எனக் கேட்டு ஈன்ற பொழுதினும் பேருவகை வெளிப்பாட்டினைத் தொல்காப்பியர்.

'மறங்கடை கூட்டியதுடிநிலை' என்பார்.

இதனைப் பொன்முடியார்

'ஈன்றுபுரந்தருதல் என்றலைக் கடனே'

என அமைக்கின்றார்.

நடுகல்

போரில் மடிந்த வீரர்களுக்கு கல்நட்டு அவர்களைக் கடவுளாக வழிபடும் மரபுநிலை

உள்ளது. வெட்சி வீரர்கள் நடத்திய போரில் இறந்துபட்ட கரந்தை வீரர்களுக்கு பெரும்பான்மையான கற்கள் நடப்பட்டன.

'நல்லிசை நிறுத்த நாணுடை மறவர்
நிரை நிலை நடுகல் - (அகம்)

என்ற வரிகளும்

நல்லமர்க் கடந்தநாணுடைமறவர்
பெயரும் பீடும் எழுதிஅதர்தொறும்
பீலி சூட்டியபிறங்குநிலைநடுகல் (அகம்)

என்ற வரிகளும்

கூறும் செய்திகளை

'காட்சி கால்கோள் நீர்ப்படை நடுகல்
சீர்த்தகு மரபில் கல்லொடு புணர (தொல்)

என்ற நூற்பா பதிவு செய்கின்றது.

இன்னும் அவ்வீரர்களின் வழி வந்தோரில் ஒரு சில மரபினர் அதைத் தங்கள் குலதெய்வமாக வழிபட்டு வருகின்றனர்.

**வாழ்வு நிலையாமை உணர்த்தல்**

வாழ்வு நிலையாமை என அறியாமலேயே அக்காலம் தொட்டு இக்காலம் வரைமனித இனம் தனக்குள் பேராசை, போட்டி, பொறாமை ஆகிய மாற்று குணங்களை வளர்த்துக் கொண்டு வருகிறது. நிலையாமையின் கருத்தைக் கூற வந்த தொல்காப்பியர் யாக்கை நிலையாமையை பின்வருமாறு கூறுகிறார்.

'கழிந்தோர் ஒழிந்தோர்க்குக் காட்டிய
முதுமையும் (தொல்-புறம்)

இதையே சங்ககாலப் புலவர்களுள் ஒருவரான நரிவெரூஉத்தலையார்

கணிச்சிக் கூர்ம்படைக் கடுந்திறவொருவன்
பிணிக்குங் காலையிரங்குவிர்மாதோ (புறம்)

எனக் கூறுகின்றார். காலனுங் காலம் பார்க்கும் (புறம்) என்பதை மறத்தல் கூடாது. இதையே திரையிசைப் பாடல் ஒன்று

'நிலைமாறும் உலகில் நிலைக்கும் என்று
நினைத்து வாழும் மனித சாதி'

எனச் சுட்டுகிறது.

**கைம்மை வாழ்வு**

கணவனை இழந்த பெண்களுக்கு நிகழ்வன மூவகை நிலைகள் எனக் காட்டியது மணிமேகலை. அதில் மூன்றாவதாகக் குறிப்பிடுவது கணவனையிழந்தாள் கைம்மையெய்தித் தவ வாழ்க்கை நடத்துதல் ஆகும்.

புறநானூற்றிலும் கூறப்பட்டுள்ள இத்தமிழ்ப் பழக்கம் இன்றுவரை நின்று நிலவி வருகின்றது. தாலி முதலிய அணிகளைக் கழற்றலும் வெண்ணிற ஆடை அணிதலும் அவன் நினைவாகப் பிண்டம் படைத்தலும் வழக்கமுறை. அப்படிபிண்டம் படைக்க அவள் வீட்டுத்தரையை ஈரப் பசுஞ்சாணத்தால் மெழுகத் தொடங்கியவுடன் அவள் கண்ணீரையே நீராக மெழுகினாள் என்பதை

"மெழுகும் ஆப்பிதன் கண்கலுழ் நீரானே'

என்ற வரிகள் மெய்ப்பிக்கின்றன. உயிர் இழப்பால் ஏற்பட்ட இச்செயலை

'இழிவே இழிவேஅசைவேவறுமையென
விளிவில் கொள்கை அழுகைநான்கே'
(தொல் - மெய்)

என அழுகை தோன்றும் நிகழ்விட மெய்ப்பாடாகத் தொல்காப்பியர் குறிப்பிடுவார்.

**கடவுள் வழிபாடு**

நாகரிகம் தோன்றிய காலம் முதல் நம் தமிழரின் வாழ்வியல் கூறுகளில் வழிபாடு என்பது பிரித்தறிய முடியாத ஒன்றாகிவிட்டது.

"மாயோன் மேயகாடுறை உலகமும்
சேயோன் மேயமைவரை உலகமும்
(தொல்)

அவ்வவ்விடங்களில் வாழ்ந்த மக்கள் அவ்வவற்றிற்குரிய கடவுள்களை வழிபட்டனர்.

'இல்லுறை தெய்வம்' (நெடு. வாடை) என்பது இறை நிலையில் குலதெய்வ வழிபாடக விளங்குகின்றது. ஆயினும் பக்தி என்ற நிலையில் கடவுள் வழிபாடு மனதளவில் என்ற நிலை மாறி தனது செல்வவளத்தை நிரூபிப்பதற்கான வழிகளில் ஒன்றாகிக் கொண்டனர்.

"குழந்தை அழுதது
குடிக்காத பாம்புக்கு
புற்றில் பால்"

என்ற கவிஞர் ஒருவரின் வரிகள் அதை நமக்கு நினைவு கூர்கின்றன.

## நிமித்தம் பார்த்தல்

சங்ககால மக்கள் முதல் தற்காலமக்கள் வரை சகுனங்களின் மீது மிகுந்த நம்பிக்கையுடையவர்களாய் இருந்து வருகின்றனர். சகுனத்தின் தன்மையைப் பொறுத்தே நன்மை தீமை விளையும் என்பது நம்புகின்றனர். காகம் கரைந்தால் விருந்தினர் வருவர்' என நம்பிக்கை வைத்தனர்.

"மறுவில் தூவிச் சிறுகருங் காக்கை
____________________
__________
____________________
__________

வெஞ்சினவிறல்வேற் காளையோடு
அஞ்சில் ஓதியைவரக்கரைந் தீமே"
(ஐங்குறுநூறு)

பல்லி சகுனம் பார்த்தல் சங்க காலத்திலிருந்தே தொடர்கின்றது.

பொருள் காரணத்தால் பிரிந்த தலைவன் உனை வாடச் செய்ய மாட்டார் எனத் தோழி தலைவியை தேற்றுகிறாள்.

இளைநலம் உடையகானஞ் சென்றோர்
புனைநலம் வாட்டுநர்அல்லர்மனைவியின்
பல்லியும் பாங்கொத்து இசைத்தன
(கலிபாலை)

இதைத் தொல்காப்பியம்

மன்னும் நிமித்தம் மொழிப் பொருள் தெய்வம்
நன்மைதீமைஅச்சஞ் சார்தலென்று

என்று கூறுகின்றது.

## முடிவுரை

தமிழ் மொழியின் இலக்கியச் சிறப்பையும் இலக்கணச் செறிவையும் ஒருங்கேஅமைத்துச் செந்தமிழின் செழுமையினைப் பேணி வளர்த்துக் கொண்டிருக்கும் நம் தமிழரின் வாழ்வியல் கூறுகள் என்பது மிகவும் போற்றுதற்குரியது என்றால் அது மிகையாகாது.

ஃ